கருக்கம்

சமூகநலம் – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சஉதி.2) துறை

அரசாணை (நிலை) எண்.72

நாள். 30.04.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
சித்திரை மாதம் 18ம் நாள்

படிக்கப்பட்டவை

1 அரசு ஆணை (நிலை) எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 06.07.2010
2 அரசு ஆணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 18.08.2010
3 அரசு ஆணை (நிலை) எண்.4, சமூக நலம் மற்றும் சத்துண வுத் திட்டத்துறை, நாள் 06.01.2011
4 சமூக நல ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.12766/சஉதி.நி.1/2011, நாள் 07.10.2011
5 முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை –113 அவர்களின் கடித ந.க.எண்.13921/இ3–2/2011, நாள் 04.10.2011.

---

ஆணை

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் 12.09.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப்பேரவை விதி எண்.110–ன் கீழ் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களில் 31.07.2011 வரை காலியாக உள்ள 28,596 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று அறிவித்தார்கள்.

2. மேற்கூறப்பட்ட அறிவிப்பின்படி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டங்களில் 31.07.2011 அன்று வரை உள்ள காலிப்பணியிட விவர அறிக்கை துறைத்தலைவர்களிடமிருந்து பெறப்பட்டது.

3. சமூக நலத்துறை இயக்குநர், முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம், சென்னை–113, ஆகியோர் கீழே

குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் அந்தந்த பதவிக்குரிய தேர்வுக்குழு மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் / துறைத்தலைவர்கள் மூலமாக நியமனம் செய்து கொள்ள அனுமதி வழங்க அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| சத்துணவு அமைப்பாளர் | = | 4,373 |
| சத்துணவு சமையலர் | = | 5,717 |
| சமையல் உதவியாளர் | = | 6,703 |
| அங்கன்வாடி பணியாளர் | = | 4,689 |
| குறு மைய அங்கன்வாடி பணியாளர் | = | 1,168 |
| அங்கன்வாடி உதவியாளர் | = | 5,946 |
| மொத்தம் | = | 28,596 |

4. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், துறைத்தலைவர்கள் அனுப்பியுள்ள கருத்துருக்களை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் ஆகிய திட்டங்களில் காலியாக உள்ள பணியிடங்களான சத்துணவு அமைப்பாளர் / சத்துணவு சமையலர் / சமையல் உதவியாளர் / அங்கன்வாடி பணியாளர் / குறு மைய அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகியவற்றின் மொத்த காலிப்பணியிடங்கள் 28,596–ஐ நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்ய அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக மாவட்ட வாரியான மற்றும் பதவி வாரியான காலிப்பணியிடங்களின் விவரம் இணைப்பு I மற்றும் இணைப்பு – II ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காலிப்பணியிடங்களை தற்போது நிரப்ப வேண்டாம் என தெரிவிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்ட காலிப்பணியிடம் நிரப்புதல் குறித்து பின்னர் தனியே ஆணை வெளியிடப்படும். இந்நியமனங்களை மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி விளம்பரத்தின் மூலம், தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று கல்வித்தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீட்டு முறை, பணியாளர் தேர்வு முறை, மையத்திலிருந்து தூரச்சுற்றளவு கடைபிடிப்பது மற்றும் பதவி உயர்விற்கான சதவிகிதம் ஆகியவற்றை பின்பற்றி அந்தந்த பதவிக்குரிய தேர்வுக்குழுவின் மூலம் பணி நியமனம் செய்ய சமூக நலத்துறை இயக்குநர், முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் கூறப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான பணியாளர்களை தெரிவு செய்த பின்னர், அவரவர்களுக்கு தற்பொழுது நடைமுறையில் உள்ளபடி வழங்கப்பட வேண்டிய ஊதியம், தற்பொழுதுள்ள உரிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

6. மாவட்ட வாரியாக காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்த விவரத்தையும் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கும்படி



141

132

துறைத்தலைவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் இசைவினை அ.சா.கு.எண்.81/து.செ(வி.சு)நிதி /2011 நாள்.15.11.2011 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை – 2.
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,
சென்னை – 15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை –3.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 5/35/79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்

நிதி (சமூக நலம்) துறை, சென்னை – 9
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.7)த் துறை, சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவு துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர் அலுவலகம்,
சென்னை –2.
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 30.4.12



142

184

அரசாணை(நிலை) எண். 72, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 30 –04–2012.

இணைப்பு–I

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்
## மாவட்ட வாரியாக காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை

| வ.எண். | மாவட்டம் | காலிப்பணியிடம் | | | |
|---|---|---|---|---|---|
| | | அமைப்பாளர் | சமையலர் | சமையல் உதவியாளர் | மொத்தம் |
| 1 | அரியலூர் | 106 | 88 | 87 | 281 |
| 2 | கோயம்புத்தூர் | 68 | 166 | 71 | 305 |
| 3 | சென்னை | 60 | 75 | 138 | 273 |
| 4 | கடலூர் | 148 | 115 | 285 | 548 |
| 5 | திண்டுக்கல் | 147 | 154 | 306 | 607 |
| 6 | தர்மபுரி | 145 | 182 | 176 | 503 |
| 7 | ஈரோடு | 150 | 309 | 244 | 703 |
| 8 | கிருஷ்ணகிரி | 232 | 243 | 339 | 814 |
| 9 | கன்னியாகுமாரி | 105 | 120 | 196 | 421 |
| 10 | காஞ்சிபுரம் | 192 | 304 | 439 | 935 |
| 11 | கரூர் | 64 | 136 | 52 | 252 |
| 12 | மதுரை | 141 | 274 | 173 | 588 |
| 13 | நீலகிரி | 40 | 103 | 82 | 225 |
| 14 | நாமக்கல் | 133 | 161 | 149 | 443 |
| 15 | நாகப்பட்டினம் | 102 | 124 | 200 | 426 |
| 16 | பெரம்பலூர் | 36 | 38 | 47 | 121 |
| 17 | இராமநாதபுரம் | 166 | 197 | 198 | 561 |
| 18 | சிவகங்கை | 171 | 102 | 380 | 653 |
| 19 | சேலம் | 97 | 232 | 231 | 560 |
| 20 | தேனி | 80 | 74 | 117 | 271 |
| 21 | தஞ்சாவூர் | 96 | 60 | 156 | 312 |
| 22 | தூத்துக்குடி | 99 | 76 | 161 | 336 |
| 23 | திருநெல்வேலி | 229 | 158 | 215 | 602 |
| 24 | திருப்பூர் | 201 | 265 | 274 | 740 |
| 25 | திருவண்ணாமலை | 160 | 285 | 445 | 890 |
| 26 | திருவாரூர் | 49 | 151 | 104 | 304 |
| 27 | திருவள்ளூர் | 109 | 343 | 173 | 625 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 40 | 06 | 13 | 59 |
| 29 | வேலூர் | 292 | 315 | 286 | 893 |
| 30 | விருதுநகர் | 244 | 312 | 266 | 822 |
| 31 | விழுப்புரம் | 247 | 297 | 439 | 983 |
| | மொத்தம் | 4149 | 5465 | 6442 | 16056 |

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

// ஆணைப்படி அனுப்படுகிறது //

30.4.12
பிரிவு அலுவலர்

124

அரசாணை(நிலை) எண்.72, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 30-04-2012.

இணைப்பு-II

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

மாவட்ட வாரியாக காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை

| வ.எண். | மாவட்டம் | காலிப்பணியிடம் | | | |
|---|---|---|---|---|---|
| | | அங்கன்வாடி பணியாளர் | குறு மைய அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் | மொத்தம் |
| 1. | கோயம்புத்தூர் | 120 | 0 | 97 | 217 |
| 2 | சென்னை | 105 | 0 | 152 | 257 |
| 3 | கடலூர் | 121 | 16 | 306 | 443 |
| 4 | திண்டுக்கல் | 165 | 0 | 116 | 281 |
| 5 | தர்மபுரி | 87 | 51 | 96 | 234 |
| 6 | ஈரோடு | 86 | 0 | 94 | 180 |
| 7 | கிருஷ்ணகிரி | 207 | 0 | 198 | 405 |
| 8 | கன்னியாகுமரி | 150 | 34 | 228 | 412 |
| 9 | காஞ்சிபுரம் | 168 | 41 | 186 | 395 |
| 10 | கரூர் | 49 | 22 | 37 | 108 |
| 11 | மதுரை | 172 | 6 | 138 | 316 |
| 12 | நீலகிரி | 32 | 1 | 51 | 84 |
| 13 | நாமக்கல் | 167 | 15 | 228 | 410 |
| 14 | நாகப்பட்டினம் | 57 | 6 | 55 | 118 |
| 15 | பெரம்பலூர் | 54 | 30 | 94 | 178 |
| 16 | இராமநாதபுரம் | 209 | 73 | 228 | 510 |
| 17 | சிவகங்கை | 252 | 40 | 262 | 554 |
| 18 | சேலம் | 121 | 0 | 181 | 302 |
| 19 | தேனி | 102 | 0 | 48 | 150 |
| 20 | தஞ்சாவூர் | 207 | 113 | 249 | 569 |
| 21 | தூத்துக்குடி | 145 | 7 | 120 | 272 |
| 22 | திருநெல்வேலி | 194 | 0 | 140 | 334 |
| 23 | திருப்பூர் | 185 | 65 | 209 | 459 |
| 24 | திருவண்ணாமலை | 33 | 241 | 413 | 687 |
| 25 | திருவாரூர் | 150 | 67 | 158 | 375 |
| 26 | திருவள்ளூர் | 202 | 35 | 298 | 535 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 101 | 13 | 158 | 272 |
| 28 | வேலூர் | 590 | 37 | 749 | 1376 |
| 29 | விருதுநகர் | 230 | 62 | 256 | 548 |
| 30 | விழுப்புரம் | 142 | 34 | 275 | 451 |
| மொத்தம் | | 4603 | 1009 | 5820 | 11432 |

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

// ஆணைப்படி அனுப்படுகிறது //

பிரிவு அலுவலர் 30.4.12

145